# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 2000 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, ஆகக் குறைந்த சம்பளங்கள் (இந்தியத் தொழிலாளர்) (திருத்தச்) சட்டம்

---

(2000 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

2000, யூலை மாதம் 14 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 01, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 4.00** **தபாற் செலவு : ரூபா 3.50**

## 2000 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, ஆகக் குறைந்த சம்பளங்கள் (இந்தியத் தொழிலாளர்) (திருத்தச்) சட்டம்

[2000 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.– ஓ. 5/99

## ஆகக் குறைந்த சம்பளங்கள் (இந்தியத் தொழிலாளர்) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம், 2000 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, ஆகக் குறைந்த சம்பளங்கள் (இந்தியத் தொழிலாளர்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. ஆகக் குறைந்த சம்பளங்கள் (இந்தியத் தொழிலாளர்) கட்டளைச் சட்டத்தின் (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 4 ஆம் பிரிவானது, "பத்து வயதுக்குக் கீழ்ப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினான்கு வயதுக்குக் கீழ்ப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது. *135 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :– *முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான (ஆ) என்னும் பந்தியில் "பத்து வயதுக்குக் குறைந்த" என்னும் சொற்களுக்குப் பதிலாக, பதினான்கு வயதுக்குக் குறைந்த" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "பத்து வயதுக்குக் குறைந்த" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினான்கு வயதுக்குக் குறைந்த" என்னும் சொற்களை இடுவதன் மூலமும். ;

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

2 - H 006541 - 700 (00/04)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.